முருகப்பெருமான் துணை

**மகான் சங்கரமகரிஷி அருளிய அறிவுரை ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**12.06.2023, திங்கட்கிழமை**

1. ஞான குருவே அரங்கா வாழ்க
   நம்பிக்கையூட்டி கலியுகத்தில்
   ஞானவான்களை உருவாக்கி
   ஞானயுகம் படைப்பேன் என வந்த
2. வந்தநல் ஆறுமுக ஞானியே
   வள்ளலே உன் பெருமை கூறி
   சிந்தைபட சோபகிருது விடை திங்கள்
   செப்பிட இருபான்நவ திகதி சோமவாரம்
   (சோபகிருது வருடம் வைகாசி மாதம் 29 ம் நாள், 12.06.2023, திங்கட்கிழமை)
3. வாரமதில் சங்கர மகரிஷியானும்
   வழங்குவேன் உலகோர் தெளிவுபெற
   சோரமின்றி மக்கள் மாயைவிட்டு
   சுத்தி கண்டு மேன்மை காண
4. காணவே நல்லறிவு ஞானம்
   கண்டுரைக்க மனவடக்கம்
   ஞானவாழ்வாக மாற்றம் பெற
   ஞானிகளின் நாமசெபம் போற்றி
5. போற்றியே பூசைமுறை ஏற்று
   புண்ணியம் தரும் அரங்கனின்
   ஆற்றல் மிக்க அன்னதான சேவை
   அறிந்து அனுகித் தொண்டாற்ற
6. ஆற்றவே கடுமையான வினை
   அகன்றோடி மனம் தெளிவுற
   பற்றுமே தயவின் வழிதனில்
   பரோபகார சிந்தை முழுதுமாகி

7. ஆகியே உயிர்கொலை நீக்கி
அனைத்து உயிரையும் தம்உயிர்போல்
அகிலத்தில் மதித்துப் போற்றும்
அருங்குணமாகத் தேறி நின்று
8. தேறிநின்று உலக மக்கள்
தேசிகன் விரும்பிய வண்ணம்
மாறிவருவர் ஞானவான்களாக
மண்ணுலகையே மாற்றும்
9. மாற்றும் மாமனிதர்களாகத் தேறி
மரணம் மறுமை கடக்கும்படி
ஆற்றல் பெருகி உலகோர்
அழியாமை பெற்று நிலைப்பர்
10. நிலைப்பர் நீதி காக்கும்படி
நிலவுலகில் ஞானவான்களாக
ஊழலற்ற நல்லத் தலைமையும்
உண்மையான ஞான ஆட்சி
11. ஆட்சித்தரும் வண்ணம் மாற்றம்
அகிலத்தில் அற்புதம் படைப்பர்
மாட்சிமைபட மக்களை காக்கின்ற
மாண்புள ஞானயுகமாக்குவர்

அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–